# யாப்பு இலக்கணம்

செயல் இயற்றுவதற்கு உரிய விதிகளையும் விதிவிலக்குகளையும் கூறுவது யாப்பு இலக்கணம் ஆகும்.

**செய்யுள் உறுப்புகள்**

செய்யுள் உறுப்புகள் ஆறு வகைப்படும் அவை

1. எழுத்து
2. அசை
3. சீர்
4. தலை
5. அடி
6. தொடை ஆகியவை ஆகும்.

**அசை**

எழுத்துக்கள் தனித்தோ, இணைந்தோ, தக்க ஒளியுடன் சீருக்கு உறுப்பாகி நின்றால் அது **அசை** எனப்படும்.

**அசை**

நேரசை — நிரையசை

**எடுத்துக்காட்டு** (நேரசை)

- அ – தனிக்குறில்
- கல் -தணிக் குறிலும் மெய்யும்
- ஆ – தனி நெடில்
- ஆல்– தனி நெடிலும் மெய்யும்

**எடுத்துக்காட்டு** (நிரையசை)

- சில – இரண்டு குறில்
- சிலர்– இரண்டு குறில் + மெய் எழுத்து
- பலா - குறிலும் நெடிலும்
- வரார்– குறிலும் நெடிலும் + மெய் எழுத்து

**சீர்**

சீர் அசைகள் ஒன்றோ, இரண்டோ, மூன்றோ, நான்கோ இயைந்து நிற்பது சீராகும். இது நான்கு வகைப்படும்.

| சீர் | வகைகள் | வாய்ப்பாடு |
|---|---|---|
| 1. | நேர் , நேர் | தேமா |
| 2. | நிறை நேர் | புளிமா |
| 3. | நிறை நிறை | கருவிழம் |
| 4. | நேர் நிறை | கூவிலும் |

**தளை**

சீர்கள் ஒன்றுடன் ஒன்று இயைந்து கட்டுப்பட்டு நிற்பது தளை எனப்படும். தளை நான்கு வகைப்படும்.

| | |
|---|---|
| **ஆசிரியத்தளை** | நேர் ஒன்றிய சிரியத் தலை |
| | நிரை ஒன்றிய ஆசிரியத்தளை |
| **வெண்டளை** | இயற்சீர் வெண்டளை |
| | வெண்சீர் வெண்டளை |
| **கலித்தளை** | – |
| **வஞ்சித்தளை** | ஒன்றிய வஞ்சித்தளை |
| | ஒன்றாத வஞ்சித்தளை |

**அடி வகைகள்**

| | |
|---|---|
| குறளடி | இரண்டு சீர்களைக் கொண்டது |
| சிந்தடி | மூன்று சீர்களைக் கொண்டது |
| அளவடி | நான்கு சீர்களைக் கொண்டது |
| நெடில் அடி | ஐந்து சீர்களைக் கொண்டது |
| கலி நெடில் அடி | ஆறு சீர்களைக் கொண்டது |

**அசை**

எழுத்து ஒன்றோ, பலவோ சேர்ந்து ஒசை உண்டாகுமாறு பிரிந்து வருவது அசை எனப்படும்.

அது நேரசை, நிரையசை என இரு வகைப்படும்.

www.tnpscgroup4.in



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

**நேரசை**

குறில் தனித்தும், குறில் ஒற்றெடுத்தும், நெடில் தனித்தும், நெடில் ஒற்றெடுத்தும், வருவது நேரசையாம்.

| | |
|---|---|
| அ, க | குறில் தனித்து வந்த நேரசைகள் |
| அல், கல் | குறில் ஒற்றெடுத்து வந்த நேரசைகள் |
| ஆ, கா | நெடில் தனித்து வந்த நேரசைகள் |
| ஆல், கால் | நெடில் ஒற்றெடுத்து வந்த நேரசைகள் |

**நிரையசை**

இருக்குறில் இணைந்தும், இரு குறில் இணைந்து ஒற்றெடுத்தும், குறில், நெடில் இணைந்தும் குறில் நெடில் இணைந்தும் ஒற்றெடுத்தும் வருவன நிரையசை.

| | |
|---|---|
| **அணி, பணி** | இருக்குறில் இணைந்து வந்த நிரையசைகள். |
| **அவர், வளம்** | இருக்குறில் இணைந்து ஒற்றெடுத்து வந்த நிரையசைகள். |
| **நிலா, கனா** | குறில் நெடில் இணைந்து வந்த நிரையசைகள். |
| **படலம், கலாம்** | குறில் நெடில் இணைந்து ஒட்டெடுத்து வந்த நிரையசைகள். |

**சீர்**

நேரசை, நிரையசைகள் தனித்தும் இணைந்தும் அமைவது சீர் எனப்படும். அஃது ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் என நான்கு வகைப்படும்.

**ஓரசைச்சீர்**

நேரசையோ, நிரையசையோ தனியாக நின்று, ஒரு சீராக வருவது ஓரசைச்சீர் எனப்படும். இது வெண்பாவின் ஈற்றடியில் இறுதிச் சீராக வரும். பாடலில் வேறு எங்கும் வராது; வரவும் கூடாது.

**எடுத்துக்காட்டு**

| சீர் | வாய்ப்பாடு |
|---|---|
| நேர் | நாள் |
| நிரை | மலர் |

**ஈரசைச்சீர்கள்**

ஈரசைச்சீர்கள் நான்கு வகைப்படும் அவை தேமா, புளிமா, கருவிளம் கூவிளம் என்பனவாகும்.

| அசை | வாய்ப்பாடு | சீர் |
|---|---|---|
| நேர் + நேர் | தேமா | மாச்சீர் 1 |
| நிரை + நேர் | புளிமா | மாச்சீர் 2 |
| நிரை + நிரை | கருவிளம் | விளச்சீர் 1 |
| நேர் + நிறை | கூவிளம் | விளச்சீர் 2 |

பொதுவாக ஈரசைச் சீரினை இயற்சீர் என்றும் ஆசிரிய உரிச்சீர் என்றும் குறிப்பர்.

**மூவசைச்சீர்**

மூன்று அசைகள் சேர்ந்து ஒரு சீராக அமைவது மூவசைச்சீர் எனப்படும். இதில் நேரில் முடிவது காய்ச்சீர் என்றும், நிரையில் முடிவது கனிச்சீர் என்றும் அழைக்கப்படும்.

**காய்ச்சீர் அமையும் விதம்**

ஈரசைச்சீர்கள் நான்கினோடு தனித்தனியாக நேரசையைச் சேர்த்தால் காய்ச்சீர் ஆகும்.

| அசை | வாய்ப்பாடு | |
|---|---|---|
| நேர் + நேர் + நேர் | தேமாங்காய் | வெண்பாவுரிச்சீர் |
| நிரை+ நேர் + நேர் | புளிமாங்காய் | வெண்பாவுரிச்சீர் |
| நிரை +நிரை + நேர் | கருவிளங்காய் | |
| நேர் + நிரை + நேர் | கூவிளங்காய் | |

**கனிச்சீர் அமையும் விதம்**

www.tnpscgroup4.in

ஈரசைச்சீர்கள் நான்கினோடு தனித்தனியாய் நிரையசையைச் சேர்த்தால் கனிச்சீராகும்.

| அசை | வாய்ப்பாடு | |
|---|---|---|
| நேர் + நேர் + நிரை | தேமாங்கனி | வஞ்சியுரிச்சீர் |
| நிரை + நேர் + நிரை | புளிமாங்கனி | |
| நிரை + நிரை + நிரை | கருவிளங்கனி | |
| நேர் + நிரை + நிரை | கூவிளங்கனி | |

**அடி**

சீர்கள் பல அடுத்தடுத்து அமைவது அடி எனப்படும். அஃது ஐந்து வகைப்படும். அவை குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கலிநெடிலடி என்பன ஆகும்.

**குறலடி**

இரு சீர்களான அடி குறளடி எனப்படும். சான்று :பொன்செய் மன்றில்வாழ்

**சிந்தடி**

மூன்று சீர்களைப் பெற்று வருவது சிந்தடி எனப்படும்.

**சான்று:** தன்னையே கொல்லும் சினம்.

**அளவடி**

அடிதோறும் நான்கு சீர்களைப் பெற்று வருவது அளவடி அல்லது நேரடி எனப்படும்.

**சான்று:**

தாய்மொழி தாயினும் தகவிற் போற்றுவன்
ஆய்மொழி யாளர்தம் அன்புக்கு ஏற்றவன்.

**நெடிலடி:**

அடிதோறும் ஐந்து சீர்களைப் பெற்று வருவது நெடிலடி எனப்படும்.

**சான்று:**

ஆடும் கடைமணி நா அசை யாமல்
அகிலமெங்கும்
நீடும் குடையைத் தரித்த பிரானிந்த நீள்
நிலத்தில்.

**கழிநெடிலடி:**

அடிதோறும் ஆறு அல்லது அதற்கு மேற்கண்ட பல சீர்களைப் பெற்று வருவதைக் கழிநெடிலடி என்று கூறுவர்.

**சான்று**

வாழ்வினில் செம்மை வேண்டும்
வாய்மையே பேசல் வேண்டும்
பாழ்ச்செயல் விலக்கல் வேண்டும்
பண்பினை காத்தல் வேண்டும்.

**கழிநெடிலடி மூன்று வகைப்படும்**

- அறுச்சீர்க் கழிநெடிலடி
- எழுச்சீர்க் கழிநெடிலடி
- எண்ச்சீர்க் கழிநெடிலடி

**அறுசீர்க்கழிநெடிலடி**

தாங்கொணா வறுமை வந்தால் சபைதனில்
செல்ல நாணும்
வேங்கைபோல் வீரங் குன்றும் விருந்தினர்க்
காண நாணும்
பூங்கொடி மனையாட் கஞ்சும் புல்லருக்
கிணங்கச் செய்யும்
ஓங்கிய அறிவு குன்றும் உலகெலாம் பழிக்கும்
தானே.

**-விவேக சிந்தாமணி**

**எழுச்சீர்க்கழிநெடிலடி**

தடித்தவோர் மகனைத் தந்தையீண் டடித்தால்
தாயுடன் அணைப்பள் தாயடித்தாள்
பிடித்தொரு தந்தை யணைப்பன்இங்
கெனக்குப்
பேசிய தந்தையுந் தாயும்
பொடித்திரு மேனி அம்பலத் தாடும்
புனிதநீ யாதலால் என்னை
அடித்தது போதும் அனணத்திடல் வேண்டும்



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

அம்மையப் பாவினி யாற்றேன் **- திருவருட்பா**

**எண்சீர்க்கழி நெடிலடி:**

பொன்னும் மெய்ப்பொரு ளுந்தரு வானைப்
போக முந்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை யென்பிழை யைப்பொறுப்பானை
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மையன் என்றறிய வொண்ணா
வெம்மானை யெளி வந்த பிரானை
அன்னம்வை கும்வ யற்பழ னத்தணி
யாரூ ரானை மறக்கலு மாமே.

**வெண்பாவின் ஈற்றில் அமையும் வாய்ப்பாடுகள்;**

வெண்பாவின் ஈற்றுச்சீர் ஓரசையில் அமைந்து நேரசையானால் நாள் என்னும் வாய்ப்பாட்டையும், நிரையசையானால் மலர் என்னும் வாய்ப்பாட்டையும் பெறும்.

**சான்று**

வாரி வளம்குன்றிக் கால்.
கால் - நேர் - நாள் (வாய்ப்பாடு)
வானம் வழங்கா தெனின்.
தெனின் - நிரை - மலர் (வாய்ப்பாடு)

வெண்பாவின் ஈற்றுச்சீர் நேர் நேர் என உகர ஈற்றுச் சீராய் வந்தால் நேர்பு அசையைக் காசு என்னும் வாய்ப்பாடாகவும், நிறை நேர் என உகர ஈற்றுச்சீராய் வந்தால், நிரைபு அசையைப் பிறப்பு என்னும் வாய்ப்பாடாகவும் கொள்ளல் வேண்டும்.

**சான்று**

புணரின் வெகுளாமை நன்று.
நன்-று- முதலசை நேர்- தேர்பு - காசு (வாய்ப்பாடு)
போற்றாது புத்தே ளுலகு.
ளுல-கு - முதலசை நிரை - நிறைபு - பிறப்பு (வாய்ப்பாடு).

## <u>அலகிட்டு வாய்ப்பாடு கூறுதல்</u>

ஒரு சீரைப் பிரித்து அசை பார்ப்பதே அலகிடுதல் எனப்படுகிறது.

அழகிடப் பின்பற்ற வேண்டிய எளிய வழிமுறைகள்:

1. மெய் எழுத்தின் / பக்கத்தில் இக்குறிடுக.
2. நெடில் பக்கத்தில் / இக்குறிடுக.
3. இருகுறில் அடுத்து / இக்குறிடுக.
4 ஒற்று அல்லது ஆய்த எழுத்தை நீக்கி, ஓர் எழுத்து இருப்பின் நேர் எனக் கொள்க.
5. இரண்டு எழுத்தாய் இருப்பின் நிரை என கொள்க.

**இறுதிச்சீரைக் காணும் எளிய வழிமுறைகள்:**

என் - நேர் - நாள்
படும் - நிரை - மலர்
நா/டு - நேர் நேர் - நேர்பு - காசு
உல/கு - நிரைநேர் - நிரைபு - பிறப்பு

**எடுத்துக்காட்டு -1**

**இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை எல்லாருஞ் செய்வர் சிறப்பு.**

| வரிசை எண் | சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|---|
| 1. | இல்/லா/ரை | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 2. | எல்/லா/ரும் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 3. | எள்/ளு வர் | நேர் நிரை | கூவிளம் |
| 4. | செல்/வ ரை | நேர் நிரை | கூவிளம் |
| 5. | எல்/லா/ருஞ் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 6. | செய்/வா | நேர் நேர் | தேமா |
| 7. | சிறப்/பு | நிரை நேர் (நிரைபு) | பிறப்பு |


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

**எடுத்துக்காட்டு: 2**

**ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்.**

| வரிசை எண் | சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|---|
| 1. | ஒழுக்/கம் | நிரை, நேர் | புளிமா |
| 2. | விழுப்/பம் | நிரை, நேர் | புளிமா |
| 3. | தர/லான் | நிரை, நேர் | புளிமா |
| 4. | ஒழுக்/கம் | நிரை, நேர் | புளிமா |
| 5. | உயி/ரினும் | நிரை, நிரை | கருவிளம் |
| 6. | ஓம்/பப் | நேர் நேர் | தேமா |
| 7. | படும் | நிரை | மலர் |

**எடுத்துக்காட்டு: 3**

**உலகத்தோ டொட்டா ஒழுகல் பலகற்றும்**
**கல்லார் அறிவிலா தார்.**

| வரிசை எண் | சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|---|
| 1. | உல/கத்/தே தா | நிரை, நேர், நேர் | புளி மாங்காய் |
| 2. | டொட்/டா | நேர், நேர் | தேமா |
| 3. | ஒழு/கல் | நிரை, நேர் | புளிமா |
| 4. | பல/கற்/றும் | நிரை, நேர், நேர் | புளி மாங்காய் |
| 5. | கல்/லார் | நேர், நேர் | தேமா |
| 6. | அறி/விலா | நிரை, நிரை | கருவிளம் |
| 7. | தார். | நேர் | நாள் |

**எடுத்துக்காட்டு 4**

**அருளென்னும் அன்பீன் குழவி பொரு**
**ளென்னுஞ் செல்வச் செவிலியால் உண்டு.**

| வரிசை எண் | சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|---|
| 1. | அரு/ளென்/ னும் | நிரை, நேர், நேர் | புளி மாங்காய் |
| 2. | அன்/பீன் | நேர், நேர் | தேமா |
| 3. | குழ/வி | நிரை, நேர் | புளிமா |
| 4. | பொரு/ளெ ன்/னுஞ் | நிரை, நேர், நேர் | புளி மாங்காய் |
| 5. | செல்/வச் | நேர், நேர் | தேமா |
| 6. | செவி/லியா ல் | நிரை நிரை | கருவிளம் |
| 7. | உண்டு | நேர்பு | காசு |

**எடுத்துக்காட்டு : 5**

**ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்**
**பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.**

| வரிசை எண் | சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|---|
| 1. | ஒறுத்/தாரை | நிரை, நிரை | கருவிளம் |
| 2. | ஒன்/றாக | நேர், நிரை | கூவிளம் |
| 3. | வை/யா/ரே | நேர், நேர், நேர் | தேமாங்கா ய் |
| 4. | வைப்/பர் | நேர், நேர் | தேமா |
| 5. | பொறுத்/தா ரை | நிரை, நிரை | கருவிளம் |
| 6. | பொன்/போ ற் | நேர், நேர் | தேமா |
| 7. | பொதிந்/து | நிரை பு | பிறப்பு |

**எடுத்துக்காட்டு : 6**


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

**ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்**
**இழிந்த பிறப்பாய் விடும்.**

| வரிசை எண் | சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|---|
| 1. | ஒழுக்/க | நிரை, நேர் | புளிமா |
| 2. | முடை/மை | நிரை, நேர் | புளிமா |
| 3. | குடி/மை | நிரை, நேர் | புளிமா |
| 4. | இழுக்/கம் | நிரை, நேர் | புளிமா |
| 5. | இழிந்/த | நிரை, நேர் | புளிமா |
| 6. | பிறப்/பாய் | நிரை, நேர் | புளிமா |
| 7. | விடும் | நிரை | மலர் |

**எடுத்துக்காட்டு : 7**

**தக்கார் இனத்தனாய்த் தானொழுக**
**வல்லானைச் செற்றார் செயக்கிடந்த தில்.**

| வரிசை எண் | சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|---|
| 1. | தக்/கார் | நேர், நேர் | தேமா |
| 2. | இனத்/தனாய்த் | நிரை, நிரை | கருவிளம் |
| 3. | தா/னொழு/க | நேர், நிரை, நேர் | கூவிளங்காய் |
| 4. | வல்/லா/னைச் | நேர், நேர், நேர் | தேமாங்காய் |
| 5. | செற்/றார் | நேர், நேர் | தேமா |
| 6. | செயக்/கிடந்/த | நிரை, நிரை, நேர் | கருவிளங்காய் |
| 7. | தில் | நேர் | நாள் |

**எடுத்துக்காட்டு : 8**

**பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை**
**மறத்தல் அதனினும் நன்று.**

| வரிசை எண் | சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|---|
| 1. | பொறுத்/தல் | நிரை, நேர் | புளிமா |
| 2. | இறப்/பினை | நிரை, நிரை | கருவிளம் |
| 3. | என்/றும் | நேர், நேர் | தேமா |
| 4. | அத/னை | நிரை, நேர் | புளிமா |
| 5. | மறத்/தல் | நிரை, நேர் | புளிமா |
| 6. | அத/னினும் | நிரை, நிரை | கருவிளம் |
| 7. | நன்/று | நேர்பு | காசு |

**எடுத்துக்காட்டு : 9**

செவியுணவின் கேள்வி உடையார்
அவியுணவின்
ஆன்றாரோ டொப்பர் நிலத்து.

| வரிசை எண் | சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|---|
| 1. | செவி/யுண/வின் | நிரை, நிரை, நேர் | கரு விளங்காய் |
| 2. | கேள்/வி | நேர், நேர் | தேமா |
| 3. | உ/டை/யார் | நேர், நேர், நேர் | தேமாங்காய் |
| 4. | அவி/யுண/வின் | நிரை, நிரை, நேர் | கருவிளங்காய் |
| 5. | ஆன்/றோ/ரோ | நேர், நேர், நேர் | தேமாங்காய் |
| 6. | டொப்/பர் | நேர், நேர் | தேமா |
| 7. | நிலத்/து | நிரைபு | பிறப்பு |



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

**எடுத்துக்காட்டு : 10**

**செவிக்குணவு இல்லாத போழ்து சிறிது வயிற்றுக்கும் ஈயப் படும்.**

| வரிசை எண் | சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|---|
| 1. | செவிக்/கு ண/வு | நிரை, நிரை நேர், | கருவிளங் காய் |
| 2. | இல்/லா/த | நேர், நேர், நேர் | தேமாங்கா ய் |
| 3. | போழ்/து | நேர், நேர் | தேமா |
| 4. | சிறி/து | நிரை, நேர் | புளிமா |
| 5. | வயிற்/றுக்/கும் | நிரை, நேர், நேர் | புளிமாங்க ாய் |
| 6. | ஈ/யப் | நேர், நேர் | தேமா |
| 7. | படும் | நிரை | மலர் |

**எடுத்துக்காட்டு : 11**

**உண்ணா நோற்பார் பெரியர் பிறர் சொல்லும். இன்னாச்சொல் நோற்பாரின் பின்.**

| வரிசை எண் | சீர் | அசை | வாய்ப் பாடு |
|---|---|---|---|
| 1. | உண்/ணா | நேர், நேர் | தேமா |
| 2. | நோற்/பார் | நேர், நேர் | தேமா |
| 3. | பெ/ரியர் | நேர், நிரை | கூவிளம் |
| 4. | பிறர்/சொல்/லும் | நிரை, நேர், நேர் | புளிமாங் காய் |
| 5. | இன்/னாச்/சொல் | நேர், நேர், நேர் | தேமாங்க ாய் |
| 6. | நோற்/பா/ரின் | நேர், நேர், நேர் | தேமாங்க ாய் |
| 7. | பின் | நேர் | நாள் |

**எடுத்துக்காட்டு :12**

**திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து அறனல்ல செய்யாமை நன்று.**

| வரிசை எண் | சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|---|
| 1. | திற/னல்/ல | நிரை, நேர், நேர் | புளி மாங்காய் |
| 2. | தற்/பிறர் | நேர், நிரை | கூவிளம் |
| 3. | செய்/யினும் | நேர், நிரை | கூவிளம் |
| 4. | நோ/நொந்/து | நேர், நேர், நேர் | தேமாங்கா ய் |
| 5. | அற/னல்/ல | நிரை, நேர், நேர் | புளி மாங்காய் |
| 6. | செய்/யா/மை | நேர், நேர், நேர் | தே மாங்காய் |
| 7. | நன்று | நேர்பு | காசு |

**எடுத்துக்காட்டு 13**

**நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய வாயின ராதல் அரிது.**

| வரிசை எண் | சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|---|
| 1. | நுணங்/கிய | நிரை, நிரை | கருவிளம் |
| 2. | கேள்/விய | நிரை, நிரை | கருவிளம் |
| 3. | ரல்/லார் | நேர், நேர் | தேமா |
| 4. | வணங்/கிய | நிரை, நிரை | கருவிளம் |


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| | | | |
|---|---|---|---|
| 5. | வா/யின | நேர், நிரை | கூவிளம் |
| 6. | ரா/தல் | நேர், நேர் | தேமா |
| 7. | அரிது | நிரைபு | பிறப்பு |

**எடுத்துக்காட்டு 14**

**கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்**
**தோட்கப் படாத செவி.**

| வரிசை எண் | சீர் | அசை | வாய்ப் பாடு |
|---|---|---|---|
| 1. | கேட்/பினு ம் | நேர், நிரை | கூவிளம் |
| 2. | கே/ளாத் | நேர், நேர் | தேமா |
| 3. | தகை/யே வ | நிரை,நிரை | கருவிளம் |
| 4. | கேள்/விய ால் | நேர், நிரை | கூவிளம் |
| 5. | தோட்/கப் | நேர் , நேர் | தேமா |
| 6. | படா/த | நிரை, நேர் | புளிமா |
| 7. | செவி | நிரை | மலர் |

**எடுத்துக்காட்டு 15**

**செவியின் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்**
**அவியினும் வாழினும் என்.**

| வரிசை எண் | சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|---|
| 1. | செவி/யின் | நிரை, நேர் | புளிமா |
| 2. | சுவை/யுண/ரா | நிரை, நிரை, நேர் | கரு விளங்காய் |
| 3. | வா/யுணர்/வின் | நேர், நிரை, நேர் | கூ விளங்காய் |
| 4. | மாக்/கள் | நேர், நேர் | தேமா |
| 5. | அவி/யினும் | நிரை, நிரை | கருவிளம் |
| 6. | வா/ழினும் | நேர், நிரை | கூவிளம் |
| 7. | என் | நேர் | நாள் |

**எடுத்துக்காட்டு 16**

**குணநலம் சான்றோர் நலனே பிறநலம்**
**எந்நலத் துள்ளதூஉ மன்று.**

| வரிசை எண் | சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|---|
| 1. | குண/நலம் | நிரை, நிரை | கருவிளம் |
| 2. | சான்/றோர் | நேர், நேர் | தேமா |
| 3. | நல/னே | நிரை, நேர் | புளிமா |
| 4. | பிற/நலம் | நிரை, நிரை | கருவிளம் |
| 5. | எந்/நலத் | நேர் , நிரை | கூவிளம் |
| 6. | துள்/ளதூ/ உ | நேர், நிரை, நேர் | கூவிளங்கா ய் |
| 7. | மன்று | நேர்பு | காசு |

**எடுத்துக்காட்டு 17**

**கடன்என்ப நல்லவை எல்லாம் கடனறிந்து**
**சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.**

| வரிசை எண் | சீர் | அசை | வாய்ப் பாடு |
|---|---|---|---|
| 1. | கடன்/என் /ப | நிரை, நேர் , நேர் | புளி மாங்காய் |
| 2. | நல்/ல/வை | நேர், நேர், நேர் | தே மாங்காய் |
| 3. | எல்/லாம் | நேர், நேர் | தேமா |
| 4. | கட/னறிந்/ து | நிரை, நிரை, நேர் | கரு விளங்கா ய் |
| 5. | சான்/றா ண்/மை | நேர், நேர், நேர் | தே மாங்காய் |

| | | | |
|---|---|---|---|
| 6. | மேற்/கொள் | நேர்,நேர் | தேமா |
| 7. | பவர்க்/கு | நிரைபு | பிறப்பு |

**எடுத்துக்காட்டு 18**

கற்றிலன் ஆயினும் கேட்க அஃதொருவற்(கு) ஒற்கத்தின் ஊற்றாந் துணை.

| வரிசை எண் | சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|---|
| 1. | கற்/றிலன் | நேர், நிரை | கூவிளம் |
| 2. | ஆ/யினும் | நேர், நிரை | கூவிளம் |
| 3. | கேட்/க | நேர், நேர் | தேமா |
| 4. | அஃ/தொரு/வற் | நேர், நிரை, நேர் | கூ விளங்காய் |
| 5. | ஒற்/கத்/தின் | நேர், நேர், நேர் | தே மாங்காய் |
| 6. | ஊற்/றாந் | நேர், நேர் | தேமா |
| 7. | துணை | நிரை | மலர் |

**எடுத்துக்காட்டு 19**

**இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்.**

| வரிசை எண் | சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|---|
| 1. | இழுக்/கல் | நிரை, நேர் | புளிமா |
| 2. | உடை/யுழி | நிரை, நிரை | கருவிளம் |
| 3. | ஊற்/றுக்/கோல் | நேர், நேர், நேர் | தேமாங்காய் |
| 4. | அற்/றே | நேர், நேர் | தேமா |
| 5. | ஒழுக்/கம் | நிரை, நேர் | புளிமா |
| 6. | உடை/யார்/வாய் | நிரை, நேர், நேர் | புளிமாங்காய் |
| 7. | சொல் | நேர் | நாள் |

**எடுத்துக்காட்டு 20**

**கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை சொல்லா நலத்தது சால்பு.**

| வரிசை எண் | சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|---|
| 1. | கொல்/லா | நேர், நேர் | தேமா |
| 2. | நலத்/தது | நிரை, நிரை | கருவிளம் |
| 3. | நோன்/மை | நேர்,நேர் | தேமா |
| 4. | பிறர்/தீ/மை | நிரை, நேர், நேர் | புளி மாங்காய் |
| 5. | சொல்/லா | நேர்,நேர் | தேமா |
| 6. | நலத்/தது | நிரை, நிரை | கருவிளம் |
| 7. | சால்பு | நேர்பு | காசு |

**எடுத்துக்காட்டு 21**

**ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின் ஏதம் படுபாக் கறிந்து.**

| வரிசை எண் | சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|---|
| 1. | ஒழுக்/கத்/தின் | நிரை, நேர், நேர் | புளி மாங்காய் |
| 2. | ஒல்/கார் | நேர்,நேர் | தேமா |
| 3. | உர/வோர் | நிரை, நேர் | புளிமா |
| 4. | இழுக்/கத்/தின் | நிரை, நேர், நேர் | புளி மாங்காய் |
| 5. | ஏ/தம் | நேர், நேர் | தேமா |



www.tnpscgroup4.in

| | | | |
|---|---|---|---|
| 6. | படு/பாக் | நிரை, நேர் | புளிமா |
| 7. | கறிந்/து | நிரைபு | பிறப்பு |

**எடுத்துக்காட்டு 22**

**அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல தம்மை இகழ்வார் பொறுத்தல் தலை.**

| வரிசை எண் | சீர் | அசை | வாய்ப் பாடு |
|---|---|---|---|
| 1. | அகழ்/வ ா/ரைத் | நிரை,நேர், நேர் | புளிமாங் காய் |
| 2. | தாங்/கு ம் | நேர், நேர் | தேமா |
| 3. | நிலம்/பே ா/லத் | நிரை, நேர்,நேர் | புளிமாங் காய் |
| 4. | தம்/மை | நேர், நேர் | தேமா |
| 5. | இகழ்/வ ார்ப் | நிரை, நேர் | புளிமா |
| 6. | பொறுத்/ தல் | நிரை, நேர் | புளிமா |
| 7. | தலை | நிரைபு | மலர் |

**எடுத்துக்காட்டு 23**

**ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாமைக்(கு) ஆழி எனப்படு வார்.**

| வரிசை எண் | சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|---|
| 1. | ஊ/ழி | நேர், நேர் | தேமா |
| 2. | பெய/ரினு ம் | நிரை, நிரை | கருவிளம் |
| 3. | தாம்/பெய/ ரார் | நேர், நிரை, நேர் | கூ விளங்காய் |
| 4. | சான்/றா ண்/மைக் | நேர், நேர், நேர் | தே மாங்காய் |
| 5. | ஆ/ழி | நேர், நேர் | தேமா |
| 6. | எனப்/படு | நிரை, நிரை | கருவிளம் |
| 7. | வார் | நேர் | நாள் |

**எடுத்துக்காட்டு 24**

**இன்மை ஒருவற்கு இளிவன்று சால்பென்னும் திண்மையுண் டாகப் பெறின்.**

| வரிசை எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | இன்/மை | நேர், நேர் | தேமா |
| 2. | ஒரு/வற்/கு | நிரை, நேர், நேர் | புளி மாங்காய் |
| 3. | இளி/வன்/ று | நிரை, நேர், நேர் | புளி மாங்காய் |
| 4. | சால்/பென் /னும் | நேர், நேர், நேர் | தே மாங்காய் |
| 5. | திண்/மை/ யுண் | நேர், நேர், நேர் | தே மாங்காய் |
| 6. | டாகப் | நேர், நேர் | தேமா |
| 7. | பெறின் | நிரை | மலர் |

**எடுத்துக்காட்டு 25**

**பருவத்தோ டொட்ட வொழுகல் திருவினைத் தீராமை ஆர்க்கும் கயிறு.**

| வரிசை எண் | சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|---|
| 1. | பரு/வத்/தோ | நிரை, நேர், நேர் | புளி மாங்காய் |
| 2. | டொட்/ட | நேர், நேர் | தேமா |
| 3. | வொழு/கல் | நிரை, நேர் | புளிமா |
| 4. | திரு/வினைத் | நிரை, நிரை | கருவிளம் |
| 5. | தீ/ரா/மை | நேர், நேர், நேர் | தே மாங்காய் |
| 6. | ஆர்க்/கும் | நேர், நேர் | தேமா |


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| | | | |
|---|---|---|---|
| 7. | கயி/று | நிரைபு | பிறப்பு |

**எடுத்துக்காட்டு 26**

**ஒழுக்கம் உடையவர்க் கொல்லாவே தீய**
**வழுக்கியும் வாயாற் சொலல்.**

| வரிசை எண் | சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|---|
| 1. | ஒழுக்/கம் | நிரை, நேர் | புளிமா |
| 2. | உடை/யவர்க் | நிரை, நிரை | கருவிளம் |
| 3. | கொல்/லா/வே | நேர், நேர், நேர் | தேமாங்காய் |
| 4. | தீ/ய | நேர், நேர் | தேமா |
| 5. | வழுக்/கியும் | நிரை, நிரை | கருவிளம் |
| 6. | வா/யாற் | நேர், நேர் | தேமா |
| 7. | சொலல் | நிரை | மலர் |

**எடுத்துக்காட்டு 27**

**அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ(டு)**
**ஐந்துசால்(பு) ஊன்றிய தூண்.**

| வரிசை எண் | சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|---|
| 1. | அன்/புநாண் | நேர் நிறை | கூவிளம் |
| 2. | ஒப்/புர/வு | நேர் நிறை நேர் | கூவிளங்காய் |
| 3. | கண்/ணோட்/டம் | நேர், நேர், நேர் | தேமாங்காய் |
| 4. | வாய்/மை/யொ | நேர், நேர், நேர் | தேமாங்காய் |
| 5. | ஐந்/துசால் | நேர், நிரை | கூவிளம் |
| 6. | ஊன்/றிய | நேர், நிரை | கூவிளம் |
| 7. | தூண் | நேர் | நாள் |

**எடுத்துக்காட்டு 28**

**பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்**
**எண்ணிய தேயத்துச் சென்று.**

| வரிசை எண் | சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|---|
| 1. | பொரு/ளென்/னும் | நிரை, நேர், நேர் | புளிமாங்காய் |
| 2. | பொய்/யா | நேர், நேர் | தேமா |
| 3. | விளக்/கம் | நிரை, நேர் | புளிமா |
| 4. | இரு/ளறுக்/கும் | நிரை, நிரை, நேர் | கருவிளங்காய் |
| 5. | எண்/ணிய | நேர், நிரை | கூவிளம் |
| 6. | தே/யத்/துச் | நேர், நேர், நேர் | தேமாங்காய் |
| 7. | சென்று | நேர்பு | காசு |



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

**பா வகைகள்**

பா நான்கு வகைப்படும். அவை

1. வெண்பா
2. ஆசிரியப்பா
3. கலிப்பா
4. வஞ்சிப்பா

**வெண்பா**

- ஈற்றடி முச்சீராய், ஏனைய அடிகள் நாற்சீராய் வரும்.
- இயற்சீர் (மாச்சீர், விளச்சீர்), வெண்சீர் (காய்ச்சீர்) வரும். பிற சீர்கள் வாரா.
- இயற்சீர் வெண்டளையும் (மாமுன் நிரை, விளமுன்நேர்) வெண்சீர் வெண்டளையும் (காய்முன் நேர்) வரும். பிறதளைகள் வரா.
- ஈற்றடியின் ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு எனும் வாய்ப்பாடுகளுள் ஒன்றைக் கொண்டு முடியும்.
- **செப்பலோசை** பெற்று வரும்.
- இரண்டடிக்கு குறையாமல் பன்னிரண்டு அடிகளுக்கு மிகாமல் வரும்.

**வெண்பாவின் வகைகள்;**

1. குறல் வெண்பா
2. நேரிசை வெண்பா
3. இன்னிசை வெண்பா
4. பஃறொடை வெண்பா
5. நேரிசைச் சிந்தியல் வெண்பா
6. இன்னிசை சிந்தியல் வெண்பா

**குறல் வெண்பா**

வெண்பாவின் பொது இலக்கணத்தைப் பெற்று இரண்டு அடிகளைக் கொண்டதாய் ஒரு விகற்பத்தானும் இரு விகற்பத்தானும் வருவது குரல் வெண்பாவாகும் (குரல் இரண்டடி)

**எடுத்துக்காட்டு;**

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

இக்குறட்பா ஒரு விகப்பத்தான் வந்த குரல் வெண்பா. (க என்னும் எழுத்து எதுகை ஆக இரண்டு அடிகளில் ஒன்றி வந்துள்ளது)

**எடுத்துக்காட்டு;**

பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளருக்கும்

எண்ணிய தேயத்துச் சென்று.

இக்கூறட்பா இரு விகற்பத்தான் வந்த குரல் வெண்பா.

**நேரிசை வெண்பா**

வெண்பாவின் பொது இலக்கணத்தை பெற்று நான்கு அடிகளை கொண்டதாயும், இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்றும் முதலிரண்டு அடி ஒரு விகற்பமாகவும், கடைசி இரண்டு அடி ஒருவிதற்பமாகவும், நான்கு அடிகளுளும் ஒரு விகற்பமாகவும், வருவது நேர் இசை வெண்பா எனப்படும்.

**எடுத்துக்காட்டு;**

நெ**ல்**லுக் கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப்

பு**ல்**லுக்கும் ஆங்கே பொசியுமாம் தொல்லுலகில்

ந**ல்**லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு

எ**ல்**லார்க்கும் பெய்யும் மழை.

மேற்கண்ட பாடல் ஒரு விகற்பத்தான் வந்த நேரிசை வெண்பாவாகும்.

**எடுத்துக்காட்டு;**

எ**ன்**று நொடங்கு மிடையன்ப வேழுலகம்

நின்ற கவிகை நிழல் வேந்தே – ஒன்று

அறுகாற் சிறுபறவை யஞ்சிறகால் வீசும்

சிறுகாற்றுக் காற்றாது தேய்ந்து

மேற்கண்ட பாடல் இரு விகற்பத்தான் வந்த நேர் இசை வெண்பாவாகும்.

**இன்னிசை வெண்பா**

வெண்பாவின் பொது இலக்கணத்தைப் பெற்று தனிச்சொல் இன்றி நான்கடிகள் உடையதாய் வரும். இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று, மூன்று விகற்பத்தான் வரும். மூன்றாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று, இரண்டு விகற்பத்தான் வருவதும் இன்னிசை வெண்பா எனப்படும்.

**எடுத்துக்காட்டு;**

**இம்**மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்

**தம்**மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்

**எம்**மை யுலகத்தும் யாம்காடேம் கல்வி போல்

**மம்**மர் அறுக்கும் மருந்து.

மேற்கண்ட பாடல் ஒரு விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா ஆகும்

**எடுத்துக்காட்டு;**

தா**னம்** கொடுங்குந் தகைமையும் மானத்தார்

கு**ற்**றங் கடிந்த வொழுக்கமும் – தெற்றெனப்

**கல்**பொரு ணீங்கிய சிந்தையும் இம்மூன்றும்

ந**ல்**வினை யார்க்குங் கயிறு

மேற்கண்ட பாடலில் இரண்டாம் அடியில் தனிச்சொல் வந்துள்ளது. நான்கடிகளிலும் மூன்றாம் விகற்பங்கள் வந்துள்ளன. எனவே இது மூன்று விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா ஆகும்.

**பஃறொடை வெண்பா**

வெண்பாவின் பொது இலக்கணத்தைப் பெற்று ஐந்தடி முதல் 12 அடிகள் வரை பெற்று வருவது பஃறொடை வெண்பாவாகும். (பல + தொடை – பஃறொடை) பல அடிகளால் தொடுக்கப் பெறுவது பஃறொடை வெண்பா ஆகும்.

**எடுத்துக்காட்டு;**

பன்மாடக் கூடல் மதுரை நெடுந்தெருவில்

என்னோடு நின்றார் இருவர் அவருள்ளும்

பொன்னோடை நன்றென்றாள் நல்லளே பொன்னோடைக்

கியானைநன் றென்றாளும் அந்நிலையள் யானை

எறுத்தத் திருந்த இலங்கிலைவேல் தென்னன்

திருத்தார்நன் றென்றேன் தியேன்.

இஃது ஆறடியான் வந்த பஃறொடை வெண்பாவகும். ஈற்றடி மூச்சீராயும் ஏனைய அடிகள்

நான்கு சீர்களாயும் அமைந்துள்ளன.

**நேரிசைச் சிந்தியல் வெண்பா**

சிந்தடி ⟶ மூன்றடி ; வெண்பாவின் பொது இலக்கணத்தைப் பெற்று, இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று, இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று, ஒரு விகற்பத்தாலும், இரு விகற்பத்தானும் மூன்றடிகளாய் வருவது நேரசை சிந்தியில் வெண்பாவாகும்.

**எடுத்துக்காட்டு;**

நற்கொற்ற வாயில் நறுங்குவளைத் தார்கொண்டு

கற்றும்வண் டார்ப்பப் புடைத்தாளே – பொற்றேரான்

பாலைநல் வாயில் மகள்.

**இன்னிசை சிந்தியல் வெண்பா**

வெண்பாவின் பொது இலக்கணத்தை பெற்று மூன்றடிகள் கொண்டதாய் தனிச்சொல்லின்றி

ஒரு விகற்பத்தானும் , பல விகற்பத்தானும், வருவது இன்னிசை சிந்தியல் வெண்பா ஆகும்.

**எடுத்துக்காட்டு;**

நறுநீல நெய்தலுங் கொட்டியுந் தீட்டிப்

பிறநாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி

பறநாட்டுப் பெண்டி ரடி.

மூன்றடிகளாய் தனிச்சொல்லின்றி வந்துள்ளது.

**வெண்பாவின் இனங்கள்**

1. வெண்செந்துறை, குறட்டாழிசை – குறள் வெண்பாவின் இனங்கள்.
2. வெளிவிருத்தம் , வெண்டாழிசை, வெண்டுறை – வெண்பாவின் இனங்கள்.

**ஆசிரியப்பா**

**ஆசிரியப்பாவின் பொது இலக்கணம்**

- அளவடிகளைப் ( நான்கு சீர்கள்) பெற்று வரும்
- இயற்சீர் (மாச்சீர் , விளச்சீர்) பயின்று வரும் பிற சீர்களும் வரும் ஆனால் வஞ்சியுரிச்சீர்கள் வரா.
- நேரோன்றாசிரியத் தளையும் நிறையொன்றா ஆசிரியத் தளையும் பெரும்பான்மையாய் வரும். சிறுபான்மை பிற தலைகளும் வரலாம்.
- மூன்றடி சிற்றெல்லைக்கு குறையாமல் எத்தனை அடிகள் வேண்டுமானாலும் வரலாம்.
- **அகவலோசை** உடையதாய் வரும்.
- ஈற்றடியின் ஈற்றுச்சீர் ஏகாரத்தில் முடிவது சிறப்பு. எனினும் ஓ, ஈ, ஆய், என், ஐ ஆகிய ஓசைகளிலும் முடியும்.
- ஆசிரியப்பாவிற்கு **அகவற்பா** என்ற மற்றொரு பெயரும் உண்டு.

**ஆசிரியப்பாவின் வகைகள் நான்கு வகைப்படும் அவை**

1. நேரிசை ஆசிரியப்பா
2. இணைக் குறல் ஆசிரியப்பா
3. நிலைமண்டல ஆசிரியப்பா
4. அடிமறி மண்டில ஆசிரியப்பா

**நேரிசை ஆசிரியப்பா**

ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை பெற்று ஈற்றயலடி முச்சீராயும், பிற அடிகள் நாற்சீராயும் வருவது நேரிசை ஆசிரியப்பா ஆகும்.

**எடுத்துக்காட்டு;**

பாரி பாரி என்று பல ஏத்தி

ஒருவர் புகழ்வர் செந்நாப் புலவர்

பாரி ஒருவனு மல்லன்

மாரியும் உண்டீண் டுலகு புரப்பதுவே.

**இணைக்குறள் ஆசிரியப்பா**

ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை பெற்று முதலடியும், கடைசியடியும் நாற்சீர் அடிகளாகவும், இடையில் உள்ள அடிகள் இருசீர் அடிகளாகவும், முச்சீர் அடிகளாகவும் வருவது இணைக் குரல் ஆசிரியப்பா ஆகும்.

**எடுத்துக்காட்டு;**

நீரின் தன்மையும் தீயின் வெம்மையும்

சாரச் சார்ந்து

தீரா தீரும்

சாரல் நாடன் கேண்மை

சாரச் சாராச் சார்ந்து

தீரத் தீரத் தீர்பொல் லாதே.

**நிலை மண்டில ஆசிரியப்பா**

ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை பெற்று எல்லா அடிகளும் நாற்சீர் அடிகளாய் வருவது நிலைமண்டில ஆசிரியப்பா ஆகும்.

**எடுத்துக்காட்டு;**

நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே

மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்

அதனால் யானுயிர் என்ப தறிகை

வேன்மிகு தானை வேந்தர்க்குக் கடனே.

**அடிமறி மண்டில ஆசிரியப்பா**

ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தைப் பெற்று எல்லா அடிகளையும் முன்பின்னாக மாற்றி மாற்றிப் படித்தாலும் ஓசையும், பொருளும் மாறாது வருவது அடிமறி மண்டில ஆசிரியப்பா ஆகும்.

**எடுத்துக்காட்டு;**

சூரல் பம்பிய சிறுகான் யாறே

சுரர மகளிர் ஆரணங் கினரே

வாரல் எனினே யானஞ் சுவலே

சாரல் நாட நீவர லாறே.

**ஆசிரியப்பாவின் இனங்கள்**

1. ஆசிரியர் தாளிசை
2. ஆசிரியர் துறை
3. ஆசிரிய விருத்தம்

**கலிப்பா**

- கலிப்பாவில் காய்ச்சீர் மட்டுமே வரும். நேர் என்னும் வாய்ப்பாட்டில் முடிகின்ற மாச்சீர் (தேமா புளிமா) வராது.
- நிரை நடுவாகிய வஞ்சியுரிச் சீர் (கருவிளங்கனி, கூவிளங்கனி வராது.
- வெண்பாவுரிச் சீர் மிக்கு, பிற சீர்களும் சிறுபான்மை கலந்து வரும்.
- கழித்தளையும் (காய் முன் நிரை) அயற்றளையும் தழுவி வரும்.
- துள்ளல் ஓசை உடையதாய் வரும்.
- நான்கு சீர் அடியாய் வரும்.
- இதன் ஆறு உறுப்புகள் தரவு, தாலிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரித்தகம் ஆகியவை ஆகும். இவற்றுள் தரவு என்பது பாடலில் அமைந்துள்ள கருத்துக்களுக்கு முன்னுரை போலவும், சுரிதகம் என்பது பாடலில் அமைந்துள்ள கருத்துக்களுக்கு முடிவுரை போலவும் அமையும்.

**தரவு**

இது கலிப்பாவின் முதல் உறுப்பாகும். பாடல் கருத்தை தொடங்கி வைக்கும் பகுதியாகும். குறைந்த அளவாக மூன்று அடிகளும் மிகுந்த அளவாக பன்னிரண்டு அடிகளும் அமையும். இதன் வேறு பெயர்கள் எருத்தம், பிடரி ஆகும்.

**தாழிசை**

இது கலிப்பாவின் இரண்டாவது உறுப்பாகும். குறைந்த அளவாக இரண்டு அடிகளும் மிகுந்த அளவாக பன்னிரண்டு அடிகளும் அமையும்.

**அராகம்**

இது கலிப்பாவின் மூன்றாவது உறுப்பாகும். அளவடி, நெடிலடி, கழிநெடிலடி இவற்றில் ஒன்றாக இது அடி அமையும். சிந்தடி மற்றும் குறளடி வாரா. இதன் வேறு பெயர்கள் வண்ணகம்,

முடுக்கியல், அடுக்கியல் ஆகும். இது நான்கடிக்கு குறையாமலும் எட்டடிக்கு மிகாமலும் இருக்கும்.

**அம்போதரங்கம்**

இது கலிப்பாவின் நான்காவது உறுப்பாகும். தரங்கம் என்றால் அலை என்பது பொருளாகும். அலை கரையை அடையும்போது அளவு சுருங்குவது போல பின் சிந்தடிகள் அடுத்து குறளடிகள் என படிப்படியாக குறைந்து வரும். இதன் வேறு பெயர்கள் அசையடி, பிரிந்திசைக் குறல், சொற்சீரடி ஆகும்.

இரண்டு அடிகள் கொண்ட அம்போதரங்கம் பேரெண் எனப்படும். அதனை அடுத்து இடம்பெறும் சிந்தடிகள் எட்டு அல்லது நான்கு இடையெண் எனப்படும். இறுதியில் இடம்பெறும் குறளடி பதினாறு அல்லது எட்டு சிற்றெண் எனப்படும். சிற்றெண்ணில் ஓரசையே சீராக வருவதும் உண்டு.

**தனிச்சொல்**

இது கலிப்பாவின் இறுதி உறுப்பாகும் இது ஆசிரியப்பாவினாலோ வெண்பாவினாலோ அமையும். ஒரு பாடலில் தரவு உறுப்பின் அடி

அளவிற்கு சமமாகவே அதன் பாதி அளவிலோ. இவ்வுறுப்பு அமையும் இதன் வேறு பெயர்கள் அடக்கியல், வாரம், வைப்பு, போக்கியல் ஆகும்.

**சுரிதகம்:**

இது கலிப்பாவின் இறுதி உறுப்பாகும். இது ஆசிரியப்பாவினாலோ வெண்பாவினாலோ அமையும். ஒரு பாடலில் தரவு உறுப்பின் அடி அளவிற்கு சமமாகவே அதன் பாதி அளவிலோ. இவ்வுறுப்பு அமையும் இதன் வேறு பெயர்கள் அடக்கியல், வாரம், வைப்பு, போக்கியல் ஆகும்.

**கலிப்பாவின் வகைகள்**

1. ஒத்தாலிசைக் கழிப்பா
2. வெண்கலிப்பா
3. கொச்சகக் கலிப்பா

**ஒத்தாசை கழிப்பா**

கலிப்பாவின் பொது இலக்கணத்தைப் பெற்று தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஆறு உறுப்புகளையோ, ஆறில் சிலவற்றையோ கொண்டு நாற்சீரடிகளால் ஒரு பொருள் மேல் ஒத்த தாழிசைகளால் வருவது ஒத்தாலிசைக் கழிப்பா ஆகும். இது

1. நேரிசை ஒத்தாழிசைக்கலிப்பா
2. அம்போதரங்க ஒத்தாழிசைக் கழிப்பா
3. வண்ணக ஒத்தாழிசைக் கழிப்பா என்று மூவகைப்படும்.

**நேரிசை ஒத்தாழிசைக் கழிப்பா**

கலிப்பாவின் பொது இலக்கணத்தை பெற்று, ஆறு உறுப்புகளுள் அராகம், அம்போதரங்கம் என்னும் இரண்டு உறுப்புகளையும் ஒழித்து, முன் தரவு வந்து, அதன் பின் ஒரு தனிச்சொல் வந்து, அதன் பின் ஆசிரியப்பா அல்லது வெண்பாவினாலாவது சுரிதக உறுப்புப் பெற்று நான்கு உறுப்புகளோடு வருவது நேரிசை ஒத்தாழிசைக் கழிப்பாவாகும். **ஒருதரவு, மூன்று தாழிசை, தனிச்சொல் சுரிதகம் பெற்று வரும்.**

**அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா**

அப்பு – தண்ணீர்; தரங்கம் – அலை.

அம்போதரங்கம் – மெலித்தல் விகாரம்.

தண்ணீர் தடாகத்தில் ஏற்படுகின்ற அலை முதலில் பெரியதாகத் தோன்றி பின்னர் படிப்படியாகக் குறைந்து கொண்டே வந்து இறுதியில் மறையும். அதுபோல, முதலில் நாற்சீரடி, அடுத்தடுத்து முச்சீரடி, இரு சீரடி என்று குறைந்து கொண்டே வந்து, அராகம் ஒழித்து ஐந்து உறுப்புகளை உடையதாய் வருவது அம்போதரங்க ஒத்தாழிசைக் கழிப்பாவாகும். ஒரு தரவு, மூன்று தாழிசை, அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்ற ஐந்து உறுப்புகளைப் பெற்று வரும்.

**வண்ணக ஒத்தாழிசைக் கழிப்பா**

கலிப்பாவின் பொது இலக்கணத்தைப் பெற்று, ஒரு தரவு, மூன்று தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஆறு உறுப்புக்களையும் முறையே ஒன்றன்பின் ஒன்றாகப் பெற்று வருமாயின் அது வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா ஆகும்.

**வெண்கலிப்பா**

இதற்கு உட்பிரிவு ஏதுவுமில்லை. கலிப்பாவின் உறுப்புகளாகிய தரவு ஒன்றை மட்டுமே பெற்று வெண்பா போன்று நாள், மலர், காசு, பிறப்பு எனும் வாய்ப்பாட்டில் முடியும். கலித்தளை மிகுதியாகவும் வெண்டளை முதலில் தளைகள் குறைவாகவும் வரும்.

**கொச்சகக் கலிப்பா**

கலிப்பாவிற்குரிய ஆறு உறுப்புகளும் முறைப்படி வராமல் தம்முன் மயங்கியும் வெண்பாவினோடும் ஆசிரியர் தினோடும் மயங்கியும் வருவனவெல்லாம் கொச்சகக் கலிப்பா எனப்படும். இஃது ஐந்து வகைப்படும்.

**தரவு கொச்சகக் கலிப்பா**

ஒரு தரவு அமைந்தால் அது தரவு கொச்சகக் கலிப்பாவாகும்

**தரவிணைக் கொச்சகக் கலிப்பா**

இரண்டு தரவுகள் அமைந்தால் அது தர வினை கொச்சகக் கலிப்பாவாகும்.

**சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா**

சில தாழிசைகள் அமைந்தால், அது சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா ஆகும்.

**பஃறொழிசைக் பொச்சகக் கலிப்பா**

பல தாலிசைகள் அமைந்தால், பஃறொழிசைக் கொச்சகக் கலிப்பா ஆகும்.

**மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா**

ஆறு உறுப்புகளும் தம்முள் மயங்கியும் வெண்பாவினோடும் ஆசிரியத்தினோடும் மயங்கியும் வருவனவெல்லாம் மயங்கிசைக் கலிப்பாவாகும்.

**கலிப்பாவின் இனங்கள்**

1. கலித்தாழிசை
2. கலித்துறை
3. கலிவிருத்தம்

| கலிப்பா வகை | தரவு | தாழிசை | அராகம் | அம்போதரங்கம் | தனிச்சொல் | சுரிதகம் |
|---|---|---|---|---|---|---|
| நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா | 1 | 3 | இல்லை | இல்லை | உண்டு | உண்டு |
| அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாா | 1 | 1 | இல்லை | உண்டு | உண்டு | உண்டு |
| வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா | 1 | 3 | உண்டு | உண்டு | இல்லை | உண்டு |
| வெண் கலிப்பா | 1 | இல்லை | இல்லை | இல்லை | உண்டு | உண்டு |
| தரவினைக் கொச்சகக் கலிப்பா | 2 | இல்லை | இல்லை | இல்லை | உண்டு | உண்டு |
| சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா | 1 | சில | இல்லை | இல்லை | உண்டு | உண்டு |
| பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா | 1 | சில | இல்லை | இல்லை | உண்டு | உண்டு |

**வஞ்சிப்பா**

- மூன்றடி சிறுமைக் கொண்டு பல அடிகளில் வரும்.
- ஒவ்வொரு அடியிலும் இரண்டு சீரும், மூன்று சீரும் வரப்பெற்றுத் தன் தளையும், பிற தளையும் தழுவி வரும்.
- **தூங்கலோசை** உடையதாய் வரும்.

**வஞ்சிப்பாவின் வகைகள்**

**குறளடி வஞ்சிப்பா**

குறளடி வஞ்சிப்பா – இரு சீர் குறளடி வஞ்சிப்பா

**எடுத்துக்காட்டு**

மைசிறந்தன மணிவரை

கைசிறந்தன காந்தாளும்

பொய்சிறந்தவர் காதலர்

மெய்சிறந்திலார் விளங்கிழாய்.

**சிந்தடி வஞ்சிப்பா**

சிந்தடி வஞ்சிப்பா– மூன்று சீர் சிந்தடி வஞ்சிப்பா

சோலை யார்ந்த சுரத்திடைக்

காலை யார்கழ லார்ப்பவும்

மாலை மார்பன் வருமாயின்

நீல உண்கண் இவள்வாழுமே

**வஞ்சிப்பாவின் இனங்கள்**

வஞ்சித் தாழிசை

வஞ்சித்துறை

வஞ்சி விருத்தம்

**மருட்பா**

வெண்பாவின் இலக்கணம் பொருந்தி முதலிலும் ஆசிரியப்பாவின் இலக்கணம் பொருந்தி இறுதியிலும் அமைவது மருட்பா ஆகும். இது புறநிலை வாழ்த்து, கைக்கிளை, வாயுறை வாழ்த்து, செவியறிவுறுஉ எனும் நான்கு பொருட்கள் மேலும் வரும்.

**தளை**

**பாடல்**

நல்லார் புகழும் நலம்பெறலும் அல்லாமல்

பல்லோார் இகழும் பழிபெறலும் – எல்லாம்

வழக்கத்தால் அல்ல வகைபெறும்நம் நட்பாம்

பழக்கத்தால் வாய்ப்பது தான் பார்.

| பாடலின் சீர் | அசை | வாய்ப்பாடு | தளை |
|---|---|---|---|
| நல்/லார் | நேர் நேர் | தேமா | மா முன் நிறை - இயற்சீர் வெண்டலை |
| புக/ழும் | நிரை நேர் | புளிமா | மா முன் நிறை - இயற்சீர் வெண்டலை |
| நலம்/பெற/லும் | நிரை நிரை நேர் | கருவிளங்காய் | காய் முன் நேர் - வெண்சீர் வெண்டலை |
| அல்/லா/மல் | நேர் நேர் நேர் | தேமாங்காய் | காய் முன் நேர் வென்சீர் வெண்டலை |
| பல்/லோர் | நேர் நேர் | தேமா | மா முன் நிறை இயற்சீர் வெண்டலை |
| இக/ழும் | நிறை நேர் | புளிமா | மா முன் நிறை இயற்சீர் வெண்டலை |
| பழி/பெற/லும் | நிறை நிறை நேர் | கருவிலங்காய் | காய் முன் நேர் வெண்சீர் வெண்டலை |
| எல்/லாம் | நேர், நேர் | தேமா | மா முன் நிறை இயற்சீர் வெண்டலை |
| வழக்/கத்/தால் | நிறை நேர் நோ | புளிமாங்காய் | காய் முன் நேர் வெண்சீர் வெண்டலை |
| அல்/ல | நேர் நேர் | தேமா | மா முன் நிறை இயற்சீர் வெண்டலை |
| வகை/பெறும்/நம் | நிறை நிறை நேர் | கருவிளங்காய் | காய் முன் நேர் வெண்சீர் வெண்டலை |
| நட்/பாம் | நேர், நேர் | தேமா | மா முன் நிறை இயற்சீர் வெண்டலை |
| பழக்/கத்/தால் | நிறை நேர் நேர் | புலி மாங்காய் | காய் முன் நேர் வெண்சீர் வெண்டலை |
| வாய்ப்/பது/தான் | நேர் நிறை நேர் | கோவில் அங்காய் | காய்முன் நேர் வெண்சீர் வெண்டலை |
| பார் | நேர் | நாள் | |

ஈற்று அயசீர் விளைச்சீர் காய் சீர் எனில்நாள் அல்லது காசு என முடியும்.இங்கு ஈற்று அயசீர் காய்ச்சீர் குவிளங்காய் ஆகும்.நேர் என்று அசை வந்து நாய் என்னும் வாய்ப்பாட்டுடன் முடிந்துள்ளது.

**பாடல்**

அல்லும் பகலும் அயரா(து) உழைத்திடின்

நல்ல மதிப்பெண்கள் நாம் பெறலாம் – இல்லை

படியே எனத் தெரிந்தால் பாக்கு மரம் போலே

நெடித்தவையில் நிற்பாய் நினை.

| பாடலின் சீர் | அசை | வாய்ப்பாடு | தளை |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| அல்லும் | நேர் நேர் | தேமா | மா முன் நிரை – இயற்சீர் வெண்டளை |
| பகலும் | நிறை நேர் | புளிமா | மா முன் நிரை – இயற்சீர் வெண்டளை |
| அயராது | நிறை நேர் | புளிமா | மா முன் நிறை - இயற்சீர் வெண்டளை |
| உழைத்திடின் | நிறை நிறை | கருவிழம் | விளம் முன் நேர் - இயற்சீர் வெண்டளை |
| நல்ல | நேர் நேர் | தேமா | மா முன் நிரை - இயற்சீர் வெண்டளை |
| மதிப்பெண்கள் | நிறை நேர் நேர் | புலி மாங்காய் | காய் முன் நேர் – வெண்சீர் வெண்டளை |
| நாம் பெறலாம் | நேர் நிறை நேர் | கோவில் அங்காய் | காய் முன் நேர் – வெண்சீர் வெண்டளை |
| இல்லை | நேர் நேர் | தேமா | மா முன் நிரை – இயற்சீர் வெண்டளை |
| படியே | நிறை நேர் | புளிமா | மா முன் நிரை - இயற்சீர் வெண்டளை |
| என திரிந்தால் | நிறை நிறை நேர் | கருவிளங்காய் | காய் முன் நேர் - வெண்சீர் வெண்டளை |
| பாக்கு மரம் | நேர் நிறை நேர் | குவிளங்காய் | காய் முன் நேர் - வெண்சீர் வெண்டளை |
| போலே | நேர் , நேர் | தேமா | மா முன் நிரை – இயற்சீர் வெண்டளை |
| நெடிதவையில் | நிறை நிறை நேர் | கருவிளங்காய் | காய் முன் நேர் – வெண்சீர் வெண்டளை |
| நிற்பாய் | நேர் நேர் | தேமா | மா முன் நிரை – இயற்சீர் வெண்டளை |
| நினை | நிரை | மலர் | – |

ஈற்று அயர்சீர் மாச்சீர் வந்துள்ளது. நிரை என்னும் அசைவில் முடிந்துள்ளதால் மலர் என்னும் வாய்ப்பாட்டில் முடிந்துள்ளது.

**பாடல்**

கற்பிப்ப தோடு கலைத்திறனைக் கண்டறிந்து
பொற்புடனே வாழப் புரிந்திடுதல் – நற்பெருமை
ஆசான் முதற்கடமை ஆகும்; இமைக்கடமை
கூசாமல் கண்காத்தல் கூறு

| பாடலின் சீர் | அசை | வாய்ப்பாடு | தளை |
|---|---|---|---|
| கற்/பிப்/ப | நேர் நேர் நேர் | தேமாங்காய் | காய் முன் நேர் வெண்சீர் வெண்டளை |
| தோ/டு | நேர் நேர் | தேமா | மா முன் நிரை இயற்சீர் வெண்டைளை |

| | | | |
|---|---|---|---|
| கலைத்/திற/னைக் | நிரை நிரை நேர் | கருவிளங்காய் | காய் முன் நேர் வெண்சீர் வெண்டளை |
| கண்/டறிந்/து | நேர் நிரை நேர் | கூவிளங்காய் | காய் முன் நேர் வெண்சீர் வெண்டளை |
| பொற்/புட/னே | நேர் நிரை நேர் | கூவிளங்காய் | காய் முன் நேர் வெண்சீர் வெண்டளை |
| வா/ழுப் | நேர் நேர் | தேமா | மா முன் நிரை இயற்சீர் வெண்டளை |
| புரிந்/திடு/தல் | நிரை நிரை நேர் | கருவிளங்காய் | காய் முன் நேர் வெண்சீர் வெண்டளை |
| நற்/பெரு/மை | நேர் நிரை நேர் | கூவிளங்காய் | காய் முன் நேர் வெண்சீர் வெண்டளை |
| ஆ/சான் | நேர் நேர் | தேமா | மா முன் நிரை இயற்சீர் வெண்டளை |
| முதற்/கட/மை | நிரை நிரை நேர் | கருவிளங்காய் | காய் முன் நேர் வெண்சீர் வெண்டளை |
| ஆ/கும் | நேர் நேர் | தேமா | மா முன் நிரை இயற்சீர் வெண்டளை |
| இமைக்/கட/மை | நிரை நிரை நேர் | கருவிளங்காய் | காய் முன் நேர் வெண்சீர் வெண்டளை |
| கூ/சா/மல் | நேர் நேர் நேர் | தேமாங்காய் | காய் முன் நேர் வெண்சீர் வெண்டளை |
| கண்/காத்/தல் | நேர் நேர் நேர் | தேமாங்காய் | காய் முன் நேர் வெண்சீர் வெண்டளை |
| கூறு | நேர் நேர் (நேர்பு) | காசு | – |

இறுதிச் சீரான கூறு குற்றியலுகர ஓசையோடு முடிந்துள்ளது. ஈற்று அயற்சீர் காய் ஆகும். எனவே காசு என்ற வாய்ப்பாடுடன் முடிந்துள்ளது.

**பாடல்**

பெற்றோர் மகிழப் பெரியோர்கள் பாராட்டும்
வற்றாத நற்குணங்கள் வாய்ப்பதற்குக் குற்றமிலா
வாயால்சொன் னால்நன்மை வாய்க்காது செய்கையினால்
ஓயாமல் நீயும் உணர்ந்து.

| **பாடலின் சீர்** | **அசை** | **வாய்ப்பாடு** | **தளை** |
|---|---|---|---|
| பெற்/றோர் | நேர் நேர் | தேமா | மா முன் நிறை – இயற்சீர் வெண்டலை |
| மகி/ழப் | நிறை நேர் | புளிமா | மா முன் நிறை – இயற்சீர் வெண்டலை |
| பெரி/யோர்/கள் | நிறை நேர் நேர் | புளி மாங்காய் | காய் முன் நேர் – வென்சீர் வெண்டலை |

| | | | |
|---|---|---|---|
| பா/ராட்/டும் | நேர் நேர் நேர் | தே மாங்காய் | காய் முன் நேர் – வெண்சீர் வெண்டலை |
| வற்/றா/த | நேர் நேர் நேர் | தே மாங்காய் | காய் முன் நேர் – வெண்சீர் வெண்டலை |
| நற்/குணங்/கள் | நேர் நிறை நேர் | கோவில் அங்காய் | காய் முன் நேர் – வெண்சீர் வெண்டலை |
| வாய்ப்/பதற்/குக் | நேர் நிறை நேர் | கோவிலங்காய் | காய் முன் நேர் – வெண்சீர் வெண்டலை |
| குற்/றமி/லா | நேர் நிறை நேர் | குவிளங்காய் | காய் முன் நேர் – வெண்சீர்வெண்டலை |
| வா/யால்/சொன் | நேர் நேர் நேர் | தேமாங்காய் | காய் முன் நேர் – வெண்சீர் வெண்டலை |
| னாள்/நன்/மை | நேர் நேர் நேர் | தேமாங்காய் | காய் முன் நேர்– வெண்சீர் வெண்டலை |
| வாய்க்/கா/து | நேர் நேர் நேர் | தேமாங்காய் | காய் முன் நேர் –வெண்சீர் வெண்டலை |
| செய்/கை/யினால் | நேர் நேர் நிறை | தே மாங்கனி | வெண்பாவில் மா, விளம், காய்ச் சீர்கள் மட்டுமே அமையும். கனி சீர் அமையாது. எனவே இது தவறாக உள்ளது. |
| ஒ/யா/மல் | நேர் நேர் நேர் | தேமாங்காய் | காய் முன் நேர் – வெண்சீர் வெண்டலை |
| நீ/யும் | நேர் நேர் | தேமா | மா முன் நிரை – இயற்சீர் வெண்டளை |
| உணர்த்/து | நிறை நேர் (நிரைபு) | பிறப்பு | – |

**உணர்த்து** என குற்றியலுகர ஓசையோடு முடிந்துள்ளது. ஈற்று அயற்சீர் மாச்சீர் ஆகும். எனவே **பிறப்பு** என்ற வாய்ப்பாட்டில் முடிந்துள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | நேர் ஒன்றா ஆசிரியத்தளை | மா முன் நேர் வருவது |
| 2. | நிறை ஒன்றா ஆசிரியத் தளை | விளம் முன் நிரை வருவது |
| 3. | இயற்சீர் வெண்டளை | மா முன் நிறை வருவது<br>விளம் முன் நேர் வருவது |
| 4. | வெண்சீர் வெண்டளை | காய் முன் நேர் வருவது |
| 5. | கலித்தளை | காய் முன் நிரை வருவது |
| 6. | ஒன்றிய வஞ்சித்தளை | கனி முன் நிரை வருவது |
| 7. | ஒன்றா வஞ்சித்தளை | கனி முன் நேர் வருவது |

**ஓசை**

1. வெண்பா – செப்பலோசை
2. ஆசிரியப்பா – அகவலோசை
3. கலிப்பா – துள்ளலோசை
4. வஞ்சிப்பா – தூங்கலோசை


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

**செப்பலோசை**

| | |
|---|---|
| வெண்சீர் வெண்டளை | ஏந்திசைச் செப்பலோசை |
| இயற்சீர் வெண்டளை | தூங்கிசைச் செப்பலோசை |
| வெண்சீர் ஒன்றலும் இயற்சீர் விகற்பமும் ஒன்றிய யாப்பு | ஒழுகிசைச் செப்பலோசை |

**அகவலோசை**

| | |
|---|---|
| நேரொன்றிய ஆசிரியத்தளை | ஏந்திசை அகவலோசை |
| நிறையொன்றிய ஆசிரியத்தளை | தூங்கிசை அகவலோசை |
| நேரொன்றா ஆசிரியத்தளையும், நிரையொன்றா ஆசிரியத்தளையும் விரவி வருவது | ஒழுகிசை அகவலோசை |

**துள்ளலோசை**

| | |
|---|---|
| கலித்தளை | ஏந்திசை துள்ளலோசை |
| வெண்சீர் வெண்டளையும், கலித்தளையும் விரவி வருவது | அகவல் துள்ளலோசை |
| பல தலைகளும் விரவி வருவது | பிரிந்திசை துள்ளலோசை |

**தூங்கலோசை**

| | |
|---|---|
| ஒன்றிய வஞ்சித்தளை | ஏந்திசைத் தூங்கலோசை |
| ஒன்றாத வஞ்சித்தளை | அகவல் தூங்கலோசை |
| பல தளைகளும் விரவி வருவது | பிரிந்திசைத் தூங்கலோசை |

**வெண்பா அடி வரையறை**

| | |
|---|---|
| இரண்டடி வெண்பா | குறல் வெண்பா |
| மூன்றடி வெண்பா | நேரிசை, இன்னிசைச் சிந்தியல் வெண்பா |
| நான்கடி வெண்பா | நேரிசை வெண்பாவும், இன்னிசை வெண்பாவும் |
| நான்கடி முதல் பன்னிரண்டு அடி வரை | பஃறோடை வெண்பா |
| பதின்மூன்றடி முதல் அதற்கும் மேற்பட்ட அடிகள் வரை | கலிவெண்பா |

**இயற்கை வெண்பா**

பொய்கையில் தாமரைமலர புள்ளினங்கள் வாழ்த்தொலிக்க

மெய்தீண்டும் தென்றல் புன்னகைக்க – பொய்யான

இருள் எனும்பகைவன் மறைந்தோட ஆதவன்

அருளோடு வந்தான் சிரித்து.

**வெண்பாவின் விதிகள் பயின்று வந்துள்ள முறை**

- முதலடி மற்றும் மூன்றாம் அடிகளில் நான்கு சீர்கள் அமைய வேண்டும்.
- இரண்டாம் அடியில் மூன்று சீர்களும் ஒரு தனிச் சீரும் வேண்டும்.
- இரண்டாம் அடியில் உள்ள தனிச்சிரீன் இரண்டாவது எழுத்தும் முதல் சீரின்இரண்டாவது எழுத்தும் ஒன்றி வர வேண்டும். பொய்கை. பொய்யான.
- நான்காம் அடி மூன்று சீர்களுடன் அமைய வேண்டும்.

- முதல் இரண்டு அடிகளில் ஒரே எதுகையும், கடைசி இரண்டு அடிகளில் ஒரே எதுகையும் அமைந்து வரலாம்
- இறுதிச்சீரின் நாள், மலர், காசு, பிறப்பு ஆகிய நான்கு வாய்ப்பாடுகளுள் ஒன்றினைக் கொண்டு முடிய வேண்டும். சிரித்து என்ற இறுதிச்சீர் பிறப்பு எனும் வாய்ப்பாடு கொண்டு முடிந்துள்ளது.

**தொடை வகைகள்**

1. மோனைத் தொடை
2. எதுகைத் தொடை
3. முரண் தொடை
4. இயைபுத் தொடை
5. அளபெடைத் தொடை

**மோனைத் தொடை**

முதற்சீரில் வந்த முதல் எழுத்தே அடுத்து வரும் சீர்களில் வந்தால் அது மோனைத் தொடையாகும்.

**அடிமோனை**

அடிதோறும் முதலெழுத்து ஒன்றி வருவது அடிமோனை ஆகும்.

அளவில்லாத பெருமையராகிய

அளவி லாஅடி யார்புகழ் கூறுகேன்

அளவு கூட உரைப்பரி யதாயினும்

அளவி லாசை துரப்ப அறைகுவேன்

**இணை மோனை 1–2**

| | | | |
|---|---|---|---|
| 1<br>கோடி | 2<br>கோடி | குறட்சிறு | பூதங்கள் |

**பொழிப்பு மோனை 1–3**

| | | | |
|---|---|---|---|
| 1<br>கருத்தொன்று | காதலினார் | 3<br>கனகமதில் | திருவாரூர் |

**ஒரூஉ மோனை 1–4**

| | | | |
|---|---|---|---|
| 1<br>அந்நாளில் | ஆளுடைய | பிள்ளையார் | 4<br>அருளாலே |

**கூழை மோனை 1–2–3**

| | | | |
|---|---|---|---|
| 1<br>அந்தணர்கள் | 2<br>அதிசயித்தார் | 3<br>அருமுனிவர் | துதிசெய்தார் |

**மேற்கதுவாய் மோனை 1–2–4**

| | | | |
|---|---|---|---|
| 1<br>அந்தணரின் | மேம்பட்ட | 3<br>அப்பூதி | 4<br>அடிகளார் |

**கீழ்க்கதுவாய் மோனை 1–2–4**

| | | | |
|---|---|---|---|
| 1<br>அன்னம் | 2<br>அன்னவள் | செய்கை | 4<br>அறைகுவாம் |

**முற்று மோனை 1–2–3–4**

| | | | |
|---|---|---|---|
| 1<br>அப்பதியில் | 2<br>அன்பருடன் | 3<br>அமர்ந்த கள்வார் | 4<br>அகலிடத்தில் |

## எதுகைத் தொடை

அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகைத் தொடையாகும்.

**அடிஎதுகை**

பஞ்சின் மெல்லடி பாவையர் உள்ளமும்
வஞ்ச மாக்காள்தம் வல்லினையும் அரன்



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

அஞ்சசெ முத்தும் உணரா அறிவிலோர் | நெஞ்சும் என்ன இருண்டது நீண்டவான்

**இணை எதுகை 1–2**

| | | | |
|---|---|---|---|
| 1<br>அன்னம் | 2<br>அன்னவள் | செய்கை | அறைகுவாம் |

**பொழிப்பு எதுகை 1–3**

| | | | |
|---|---|---|---|
| 1<br>மன்னவனார் | அதுமொழிய | 3<br>வன்றொண்டர் | எதிர்மொழிவார் |

**ஒரூஉ எதுகை 1–4**

| | | | |
|---|---|---|---|
| 1<br>முன்மால் | அயன் அறியா | மூர்த்தியார் | 4<br>முன்னிலை |

**கூழை எதுகை 1–2–3**

| | | | |
|---|---|---|---|
| 1<br>இன்ன | 2<br>தன்மைய | 3<br>பின்னும் | 4<br>முன்னினார் |

**மேற்க்கதுவாய் எதுகை 1–3–4**

| | | | |
|---|---|---|---|
| 1<br>மன்னுபூ | சனைமகிழ்ந்த | 3<br>மன்னர் கோயில் | 4<br>முன்னினார் |

**கீழ்க்கதுவாய் எதுகை 1–2–4**

| | | | |
|---|---|---|---|
| 1<br>நன்மை கண் | 2<br>நின்ற | நலம்என்றுங் | 4<br>குன்றாதளம் |

**முற்று எதுகை 1–2–3–4**

| | | | |
|---|---|---|---|
| 1<br>துப்பார்க்குத் | 2<br>துப்பாய | 3<br>துப்பாக்கித் | 4<br>துப்பார்க்குத் |

## முரண் தொடை

முரண் என்றால் மாறுபாடு. பாட்டின் அடிகளில் சொற்கள் முரணாக அமைந்து வருவது முரண் தொடையாகும்.

**அடிமுரண்**

இப்பந்தர் இப்பெயரிட் டிங்கமைத்தார் யார் என்றார்க்கு

அப்பந்தர் அறிந்தார்கள் ஆண்டஅர செனும் பெயரல்

செப்பருஞ்சீர் அப்பூதி அடிகளார் செய்தமைத்தார்

தப்பின்றி எங்குமுள சாலை குளங் கா என்றார்.

**இணை முரண் 1–2**

| | | | |
|---|---|---|---|
| 1<br>ஆதி | 2<br>அந்தம் | இலாமை | அடைந்தவன் |

**பொழிப்பு முரண் 1–3**

| | | | |
|---|---|---|---|
| 1<br>மேலுற | எழுந்துமிகு | கீழுற | அகழ்ந்து |

**ஒரூஉ முரண் 1–4**

| | | | |
|---|---|---|---|
| 1 | | | 4 |



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| | | | |
|---|---|---|---|
| புலிவாயின் | மருங்கணையும் | புல்வாய | புல்வாயும் |

**(புல்வாய் – புல்லைத் தின்னும் இனங்கள்)**

**கூழை முரண் 1–2–3**

| | | | |
|---|---|---|---|
| 1<br>கேடும் | 2<br>ஆக்கமும் | 3<br>கெட்ட | திருவினார் |

**மேற்க்கதுவாய் முரண் 1–3–4**

| | | | |
|---|---|---|---|
| 1<br>வானவர்கள் | மலர்மாரி | 3<br>மண்ணிறைய | 4<br>விண்ணுலகின் |

**கீழ்க்கதுவாய் முரண் 1–2–4**

| | | | |
|---|---|---|---|
| 1<br>மாலை | 2<br>யாமம் | புலர்வறும் | வைகறை |

**முற்று முரண் 1–2–3–4**

| | | | |
|---|---|---|---|
| 1<br>நின்றாலும் | 2<br>இருந்தாலும் | 3<br>கிடந்தாலும் | 4<br>நடந்தாலும் |

## இயைபுத் தொடை

இறுதிச் சீர் ஒன்றிவருவது இயைபுத் தொடை ஆகும்.

**அடி இயைபு**

எண்ணிய முடிதல் வேண்டும்

நல்லவை எண்ணல் வேண்டும்

திண்ணிய நெஞ்சம் வேண்டும்

தெளிந்த நல்லறிவு வேண்டும்

இயைபுக்கு இறுதிச் சீரை ஒன்று என எடுத்துக்கொண்டு மற்ற சீர்களை 2,3 என்று கணக்கிட வேண்டும்.

**இணை இயைபு 2–1**

| | | | |
|---|---|---|---|
| தெய்வநெறிச் | சிவம்பெருக்குந் | 2<br>திருவாமூர் | 1<br>திருவாமூர் |

**பொழிப்பு இயைபு 3–1**

| | | | |
|---|---|---|---|
| கரும்பல்ல | 3<br>நெல்லென்ன | கமுகல்ல | 1<br>கரும்பென்ன |

**ஒரூஉ இயைபு 4–1**

| | | | |
|---|---|---|---|
| 4<br>ஆர்பரவை | அணிதிகழும் | மணிமுறுவல் | 1<br>அரும்பரவை |

**கூழை இயைபு 3–2–1**

| | | | |
|---|---|---|---|
| சீர்பெருகு | 3<br>நீலநக்கர் | 2<br>திருமுருகர் | 1<br>முதந்தொண்டர் |

**மேற்க்கதுவாய் இயைபு 4–3–1**

| | | | |
|---|---|---|---|
| 4<br>முன்றில்தொறும் | 3<br>வீதிதொறும் | முகநெடுவாயில்கள் | 1<br>தொறும் |

**கீழ்க்கதுவாய் இயைபு 4–2–1**

| | | | |
|---|---|---|---|
| 4<br>தேடினார் | இருவருக்குந் | 2<br>தெரிவரியார் | 1<br>திருமகனார் |

**முற்றியைபு 4–3–2–1**

| | | | |
|---|---|---|---|
| 4<br>புல்லோடும் | 3<br>கல்லோடும் | 2<br>பொன்னோடும் | 1<br>மணியோடும் |

## அளபெடைத் தொடை

**அடி அளபெடை**

நல்லோஒர் உளத்தைப் புண்படுத் துகின்ற

பொல்லா அப் புல்லனை ஒழித்திட அவன் போல்
கல்லாஅ ஒருவனை அனுப்பச் செயல் புரிந்திடும்
எல்லாஅம் வல்ல இறைவனை ஏத்துவோம்.

**இணை அளபெடை 1–2**

| | | | |
|---|---|---|---|
| 1<br>அறமேஎ | 2<br>அறமேஎ | வெல்லும் | அறிவீர் |

**பொழிப்பு அளபெடை 1–3**

| | | | |
|---|---|---|---|
| 1<br>சூஉழ்ச்சியால் | வந்தவை | 3<br>நில்லாஅ | நினமின் |

**ஒரூஉ அளபெடை 1–4**

| | | | |
|---|---|---|---|
| 1<br>நல்லோஓர் | கவலை | ஒழியும் | 4<br>சின்னாஅள் |

**கூழை அளபெடை 1–2–3**

| | | | |
|---|---|---|---|
| 1<br>தீயோஓர் | 2<br>என்னாஅளும் | 3<br>ஆஅளார் | தெரிவீர் |

**மேற்கதுவாய் அளபெடை 1–3–4**

| | | | |
|---|---|---|---|
| 1<br>கொடியோஓர் | சொற்களைச் | 3<br>சான்றோஓர் | 4<br>கொள்ளாஅவர் |

**கீழ்க்கதுவாய் அளபெடை 1–2–4**

| | | | |
|---|---|---|---|
| 1<br>உயர்ந்தோஓர் | 2<br>சேஎரின் | உண்டாகும் | 4<br>நலனேஎ |

**முற்று அளபெடை 1–2–3–4**

| | | | |
|---|---|---|---|
| 1<br>கீழோஓர் | 2<br>செயலோஒ | 3<br>கீழோஅம் | 4<br>அழிவாஅம் |

## பிற தொடை வகைகள்

- செந்தொடை
- அந்தாதித் தொடை
- இரட்டைத் தொடை

**செந்தொடை** எதுகை,மோனைத் தொடை வகைகள் இன்றி வரும் பாடல் செந்தொடை வகை எனப்படும்.

**எ.கா;**

பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலினம் அகவு நாடன்



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

நன்னுதற் கொடிச்சி மனத் தகத்தோனே.

**அந்தாதித் தொடை**

அந்தம் – கடைசி ; ஆதி – முதல்

பாடலுள் அடிதோறும் இறுதியில் வரும் எழுத்தோ, அசையோ, சீரோ, அடுத்த அடியில் முதலாவதாக வந்தால் அது அந்தாதித் தொடை எனப்படும்.

**எ.கா;**

உலகுடன் விளக்கும் ஒளிதிகழ் அவிர்மதி
மதிநலன் அழிக்கும் வளங்கெழு முக்குடை
முக்குடை நீழற் பொற்புடை யாசனம்
ஆசனத் திருந்த திருந்தொளி அறிவன்.

**இரட்டைத் தொடை**

பாடலுள் ஓரடி முழுவதும் முதலில் வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வருவது இரட்டைத் தொடையாகும்.

**எ.கா;**

ஒக்குமே ஒக்குமே ஒக்குமே ஒக்கும்
விளக்கினிற் சீற்றெரி ஒக்குமே ஒக்கும்
குளக்கொட்டிப் பூவின் நிறம்.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in